# தரம் 12

# முதலாந்தவணை



# தமிழ்

## கட்டுரை

## தமிழ்த் தொண்டு

Mr. Rafaideen Thowfeek

T/Mu/An-Nahar Girls Maha Vidyalayam, Mutur

Trincomalee

# தமிழ்த் தொண்டு

இக் கட்டுரையானது "தமிழ்த் தொண்டன் பத்திரிகையில் விபுலானந்த அடிகளாரால் எழுதப்பட்டதாகும்.. பின்னர் "சுவாமி விபுலானந்தரின் ஆக்கங்கள் தொகுதி - 2" என்னும் நூலில் எட்டாவது கட்டுரையாக இடம்பெற்றுள்ளது.

இக் கட்டுரையின் பிரதான கருத்தாக ஏனைய தேசத்தவர்களுக்கு இணையாகத் தமிழர்களாகிய நாம் வாழ வேண்டுமாயின், சோர்வுற்று மீண்டெழுந்த எம் தாய் மொழியாகிய தமிழ் மொழிக்கு ஏற்றதான தொண்டினைச் செய்தல் வேண்டும்.

# தமிழ்த் தொண்டு

## கட்டுரையின் துணைக்கருத்துக்களாக

- இன்றும் நிலைபெற்று வழங்கிவரும் தமிழ்மொழி வழக்கிலுள்ள மொழிகளுள் தொன்மையானது.
- மூவேந்தர் காலத்தில் தமிழ்மொழி சிறப்புற்றிருந்தது.
- தமிழ்மொழி பிற்காலத்தில் வளர்ச்சி குன்றியிருந்தாலும் இன்று மீண்டும் விழித்தெழுந்துவிட்டது.
- இலக்கிய படைப்புக்களில் உள்ள உண்மையை அறிந்து பின்பற்றுவோர் வாழ்கையில் உயர்வடைவர்.
- பழங்கதைகளைப் பேசுவதால் பயனில்லை; புதிய முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.
- தேசத்தைச் சீர்படுத்த முயல்வோர் முதலில் தன்னைச் சீர்படுத்தல் வேண்டும்.
- சமகால நாகரிகங்களுக்கும் பலதேசத் தொடர்பினுக்கும் இயைபாகும்படி நித்தியமான உண்மைகளை மக்களுடைய உள்ளத்தில் படியும்படியாக எடுத்துச் சொல்லும் ஆற்றலுடையவனே தன்னுடைய நாட்டிற்குப் புத்துயிர் அளிக்கவல்ல உண்மைக் கவியாவான்.
- மகாகவி பாரதியார் அத்தகைய கவிஞராவார்.
- வட மொழியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட வேண்டிய நூல்கள் பலவுள்ளன; அவ்வாறு மொழிபெயர்க்க முயல்வது சிறந்த தமிழ்த் தொண்டாகும்.

## வினாக்கள்

**<u>சரியாயின் (√) எனவும் பிழையாயின் (χ) எனவும் அடையாளமிடுக.</u>**

1) தமிழ்த் தொண்டு எனும் கட்டுரையை புதுமைப்பித்தன் எழுதியுள்ளார். ( )

2) தமிழ் மொழியிலுள்ள நன்மணிகளைப் பிறர் அறியுமாறு செய்தல் வேண்டும்; பிற மொழிகளில் பெயர்க்க வேண்டும். ( )

3) தமிழர்கள் ஏனைய நாடுகளில் வாணிகத்திலும், தொழிற்துறைகளிலும் ஈடுபட்டவர்களாய் வாழ்ந்து வருகின்றார்கள் ( )

4) “பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்…” எனும் பாடல் சுப்ரமணிய பாரதியாரால் பாடப்பட்டுள்ளது. ( )

5) தமிழ் மொழியிலுள்ள நூல்களை வட மொழியில் பெயர்த்தெழுத முயல்வது சிறந்த தமிழ்த் தொண்டாகும். ( )

## விடைகள்

1) χ
2) √
3) √
4) √
5) χ

## வினாக்கள்

**பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.**

1) தமிழ் வளர்த்த முடி மன்னர்கள் யார்?

2) முச்சங்கங்கள் என்று அழைக்கப்படுபவை எவை?

3) "செல்வத்தில் வளர்ந்த சீமாட்டி அல்லலுற்றலைகின்ற தன்மை போலத் தமிழ் மாது பொலிவிழந்து தோன்றுகின்றாள்" இதில் கையாளப்பட்டுள்ள பொருளணி யாது?

4) தமிழர் உலகத்தின் எப்பாகங்களில் வசித்து வருவதாக கூறப்பட்டுள்ளன?

5) தமிழ் மொழி தன்னியல்பினிற்குன்றிச் சோர்வினால் அயற்சியடைந்ததற்கான காரணங்கள் எவை?

6) திருப்பள்ளியெழுச்சி என்றால் என்ன?

7) கல்வியென்பதற்கு இக்கட்டுரைப்பகுதியில் கூறப்படும் விரைவிலக்கணம் யாது?

8) உத்தம கவிகளுக்குரிய சிறப்பியல்பு யாது?

## வினாக்கள்

9) வாழ்வில் உயர்நிலையை அடைய எவ்வாறான நூல்களை கற்றுக்கொள்ள வேண்டுமென கூறப்பட்டுள்ளன?

10) கலை மகளுடைய அருளினைப் பெற்றவர் யார் எனக் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது?

## விடைகள்

1) சேர, சோழ, பாண்டியர்கள்

2) முதற் சங்கம்
இடைச் சங்கம்
கடைச் சங்கம்

3) உவமை

4) தென்னாபிரிக்கா
மலாயா
நமது நாடாகிய இலங்கைத் தீவு
மத்திய அமெரிக்கா
சிங்கப்பூர்
தமிழ் நாடு

5) அரசியல் மாற்றங்கள்
பிற மொழியாட்சி

## விடைகள்

6) இறைவன் துயிலெழுப்பாடும் பாடல், தமிழின் எழுச்சிக்காக பாடும் பாடல்.

7) வாழ்க்கையினது மர்மத்தையறிந்து கொள்வதற்கு உபயோகமான கல்வியே கல்வியெனப்படும்.

8) வாழ்க்கையின் இரகசியங்களை ஊடுருவி நோக்குமாற்றல்.

9) புறநானூறென்னும் சங்கத் தொகை நூல்
சீவகன் சரிதை
கம்பராமாயணம்

10) கவிவாணர் நான் முகத்தேவன்.

## வினாக்கள்

**இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லினை இட்டு இடைவெளியைப் பூர்த்தி செய்க.**

1) பழைய பெருமைகளைப் பேசாமல் ..................... கூறியபடி தகுதியான நூல்களை தமிழில் மொழி பெயர்த்துக் கொள்ள வேண்டும்

2) காரிருட் காலம் கழிந்து விட்டமையால் எமது ..................... வளர்க்கப் புதிய ஊக்கத்துடன் நாம் தொண்டு செய்வோம்.

3) உத்தம கவிகள் ....................... போல புதியவற்றை படைக்கக் கூடியவர்கள்.

4) தமிழில் சூத்திரர்க்கும் பெண்களுக்கும் ஏற்ற சில ..................... கதைகளே மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

5) பாரதியார் மறைந்து பல ஆண்டுகளாகிவிட்டாலும், அவருடைய கவிதைகள் நாடு முழுவதும் பரவி, மக்களுக்குப் ....................... அளித்து வருகின்றன.

## விடைகள்

1) மகாகவி சுப்ரமணிய பாரதியார்

2) அன்னை மொழியை

3) பிரம்மாவைப்

4) புராணக் கதைகளே

5) புத்துயிர்

## வினா விடைகள்

**சரியான விடையின் கீழ் கோடிடுக**

1) திருவேங்கடம் முதல் தென்குமரியை எல்லையாக உடையதாக கூறப்படுவது?

(அ) தென்னாபிரிக்கா (ஆ) மலாயா

(இ) தமிழ்நாடு (ஈ) சிங்கப்பூர்

2) நாட்டுக்கு புத்துயிரளிக்கவல்ல உண்மைக் கவிஞன் யார் எனக் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது?

(அ) புதுமைப்பித்தன் (ஆ) சுவாமிவிபுலானந்தர்

(இ) கல்கி (ஈ) சுப்ரமணிய பாரதியார்

3) மேல்நாட்டாசிரியர்களால் வட மொழியிலிருந்து தம் மொழியில் பெயர்த்தெழுதிய நூல்களுல் அடங்காதது எது?

(அ) நியாயம் (ஆ) கணிதம்

(இ) யோகம் (ஈ) உத்தரமீமாம்சை

4) தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதாக கூறப்படுவது?

(அ) சிற்பம் (ஆ) தருக்கம்

(இ) புராணக்கதை (ஈ) ஆயுர்வேதம்

## வினா விடைகள்

5) சங்கத்தொகை நூலாக இக் கட்டுரையில் குறிப்பிடப்படுவது எது?

(அ) கம்பராமாயணம் (ஆ) சீவகன் சரிதை

(இ) புறநானூறு (ஈ) திருக்குறள்

6) இக்கட்டுரைப்பகுதியில் தமிழ் மொழியானது எத்தனை கோடி மக்களுடைய வழக்கு மொழியாக பயன்படுத்தப்படுவதாக கூறப்படுகின்றது?

(அ) இரண்டு கோடி (ஆ) மூன்று கோடி

(இ) நான்கு கோடி (ஈ) ஐந்து கோடி

7) முச்சங்கங்களுக்கு தலைமை வகித்த புலவர் யார்?

(அ) கபிலர் (ஆ) பரணர்

(இ) அகத்தியர் (ஈ) நக்கீரர்

8) ஒரு தேசத்தில் வாழுகின்ற மக்கள் சீர்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறப்படுவதினுல் அடங்காதது எது

(அ) அரசியல் நிலை (ஆ) பொருளாதார நிலை

(இ) சமூக நிலை (ஈ) சமய நிலை

## வினா விடைகள்

9) மகாகவி சுப்ரமணிய பாரதியார் தமிழில் மொழிபெயர்த்துக் கொள்ள வேண்டும் என கூறப்படுவது எது?

**(அ) நல்லறிஞர் சாத்திரங்கள்** **(ஆ) பழங்கதைகள்**

**(இ) புராணக் கதைகள்** **(ஈ) விடுகதைகள்**

10) உலக மாதாவாக சுட்டிக் காட்டப்படுபவர் யார்?

**(அ) பராசக்தி** **(ஆ) சிவன்**

**(இ) பிரம்மன்** **(ஈ) விஷ்னு**

## விடைகள்

1) தமிழ்நாடு
2) சுப்ரமணிய பாரதியார்
3) கணிதம்
4) புராணக் கதை
5) புறநானூறு
6) இரண்டு கோடி
7) அகத்தியர்
8) சமய நிலை
9) நல்லறிஞர் சாத்திரங்கள்
10) பராசக்தி

# நன்றி